# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).
*************

மனு எண்: 0336/2017/ஊராட்சி

ஆணை எண்: 038/2017

நாள்: 23/03/2017

திரு. பி. எம். சுப்பையா,
31/85, முனியசாமி கோயில் தெரு,
ஈராச்சி- 628 720. - மனுதாரர்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம்,
தூத்துக்குடி வட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை

தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஈராச்சியில் வசிக்கும் திரு. பி. எம். சுப்பையா, தனது 11.03.2017 நாளிட்ட கடிதத்தில், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் 2012-13 முதல் 2015-16 ஆண்டு வரை 4 ஆண்டுகளுக்குரிய வரவு செலவுத் திட்டம் ஒன்றியக் குழுவால் அங்கீகரிக்கப்படாமல் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், தமிழ் நாடு நிதி தொகுப்பு விதி எண்கள் 3 மற்றும் 40-ன்படி வட்டார வளர்ச்சி அலுவலர் எந்த செலவினம் வேண்டுமென்றாலும் ஒன்றியக்குழு ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின்படி தான் செலவு மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், ஆனால் அதற்கு மாறாக கோவில்பட்டி ஒன்றியத்தில் ஒன்றியக் குழுவின் அனுமதியில்லாமல் கடந்த 4 ஆண்டுகளாக செலவு மேற்கொண்டமைக்கு காரணமான வட்டார வளர்ச்சி அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே இம்மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர் திரு. பி.எம். சுப்பையா அவர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 23-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

**பெறுநர்**

திரு. பி. எம். சுப்பையா,
31/85, முனியசாமி கோயில் தெரு,
ஈராச்சி Po. - 628 720,
எட்டையபுரம் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம்.

**நகல்:**

மாவட்ட ஆட்சித் அலுவலர்,
தூத்துக்குடி மாவட்டம்,
தூத்துக்குடி. (இணைப்புடன்)